BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# 2020 ஆம் வருடத்திற்குள்ளாக முடிக்க வேண்டிய நகர்மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களின் (2020 Term of Council Priorities) சாராம்சங்களை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வெளியிடுகிறது மற்றும் 2021-2022 காலத்திற்கான 16 முன்னுரிமை கொண்ட விஷயங்களின் மீது கவனம் செலுத்த நகர் மன்றம் ஒப்புதல் அளிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 28, 2021) – நேற்றைய தினம், 2018-2022 காலத்திற்கான, நகர்மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்னெடுத்துச்செல்வது பற்றிய புதுத் தகவல்களை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வெளியிட்டது; இதில், கடந்த ஆண்டுக் காலத்தில், அதுவும் பெருந்தொற்று பரவல் காலத்தில் புரிந்த முக்கிய சாதனைகள் எடுத்துக் காட்டப்பட்டன.

மேயர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள், மூத்த தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டக் கருத்துக்கள், மற்றும் 2020 நவம்பரில் கவுன்சில் பணிப்பயிற்சியின்போது நிகழ்த்தப்பட்ட வாக்களிப்பு செய்வது பற்றிய ஒரு பயிற்சி ஆகியவற்றின் விளைவாக, சமுதாயத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னுரிமை கொண்ட விஷயங்களாக கவுன்சில் 16 முனைப்புக்களை (16 initiatives) (பக் .162) தெரிவித்து நேற்றையதினம் ஒப்புதல் அளித்தது. முன்னுரிமை கொண்ட விஷயங்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன: அரசுகளுக்கு இடையேயானவை / ஆலோசனை கூறும் வகையிலான முன்னுரிமைகள்; மற்றும் நகருக்கு கட்டாயமானவை / கட்டுப்படுத்தப்பட்ட முன்னுரிமைகள்; இவை அனைத்துமே ப்ராம்ப்ட்டன் நகரின் நிலைநாட்டப்பட்ட யுக்திரீதியான செயல் இயக்கங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கின்றன.

கோவிட்-19 தொற்று பரவலானது, எதிர்பாராத நிலைமைகளையும் சவால்களையும் உருவாக்கியது; ஊழியர்கள் விரைவாக தங்களையும் மாற்றியமைத்துக்கொண்டு, திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதிலும் மாற்றம் செய்துகொள்வது தேவையானது. இவையனைத்தும் இருந்தபோதிலும், கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் நகரம் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்ட அதே சமயத்தில் மீட்டெடுப்பையும் செய்தபடி முக்கிய பகுதிகளில் தொடர்ந்து முன்னேறியது:

## ப்ராம்ப்ட்டன் நகரமானது வாய்ப்புக்கள் நிறைந்த நகரமாகும்

ப்ராம்ப்ட்டன் நகரமானது கீழ்க்கண்டவற்றின் மூலமாக மக்கள் வாழ்வதற்கேற்ற தன்மையை தொடர்ந்து மேம்படுத்தி வியாபாரங்களுக்கும் ஆதரவளிக்கிறது:

- சிறு வணிகங்களுக்கு மானியமாக $233,000 நிதி வழங்குதல்
- 137 மெய்நிகர் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் மூலமாக 5,000 பங்கேற்பாளர்களை ஈடுபடுத்துதல்

- 1,043 வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்; இதில், ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் மூலமாக 38 புதிய தொழில்களை உருவாக்குதல் மற்றும் 82 தொழில்களை விரிவாக்கம் செய்தல் ஆகியவை அடக்கம்.
- டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் - இல் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக புதுமை படைக்கும் மாவட்டத்தில் நான்கு புதிய கூட்டு முயற்சிகளை துவக்குதல்

**ப்ராம்ப்ட்டன் நகரமானது பல கலவை கொண்ட நகரமாகும்**

ப்ராம்ப்ட்டன் நகரின் பன்முகத்தன்மையை தொடர்ந்து கொண்டாடி வருகிறது மற்றும் அனைவரையும் உள்சேர்க்கும் சவால் நிறைந்த பணியை மேற்கொள்கிறது, இவற்றின் மூலமாக :

- ப்ராம்ப்ட்டன் முன்பணம் வழங்குவதற்கான நிதியத்தில் $435,561 முதலீடு செய்தது, லாப நோக்கற்ற 48 டிஜிட்டல் திட்டங்களை ஆதரித்தது
- கறுப்பர் இன ஆப்பிரிக்க மற்றும் கரீபிய சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பை நிறுவுதல்; மற்றும் பணியிடத்திலும் சமூகத்திலும் உள்ள தடைகளை அடையாளம் கண்டு, அவற்றை நீக்குவதை கவனத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டில்  சமத்துவ அலுவலகத்தை துவங்க ஒப்புதல் அளித்தது.
- 900 பங்கேற்பாளர்கள் எனும் சாதனை பங்கேற்புடன் கறுப்பின சமூகத்திற்கான தீயணைப்பு சேவைகள் தொழில் தகவல் அமர்வை முன்வந்து உபசரித்து செய்தது
- பாதுகாப்பு மற்றும் அனைவரையும் உள்சேர்ப்பதில் கவனம் செலுத்துவதன் முகமாக, *பர்ப்பிள் லிலாக் மெமோரியல் பார்க்* (Purple Lilac Memorial Park) மற்றும் *இமான்சிபேஷன் பார்க்* (Emancipation Park)  எனும் இரண்டு நகர பூங்காக்களுக்கு மறுபெயரிடுவது

**ப்ராம்ப்ட்டன் நகரமானது பசுமை நகரமாகும்**

நகரமானது, புதுமைபடைத்தல், எரிசக்தி திறன், பொதுப் போக்குவரத்து மற்றும் இயற்கைவளம் கொண்ட இடங்களை புத்துயிர் பெறவைப்பது ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது:

- நகரத்தின் முதன்முதலான கொல்லைப்புற தோட்டத் திட்டத்தைத் தொடங்கி, 6,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை அதற்காக ஈர்த்து, உள்ளூர் உணவு வங்கிகளுக்கு 10,000 பவுண்டுகள் உற்பத்திப்பொருட்களை  நன்கொடையாக வழங்கியது
- பசுமை இல்ல வாயுக்களைக் குறைப்பதற்க்காக தனது சமூகத்தில் சக்தி மற்றும் உமிழ்வு குறைப்புக்கான திட்டத்தை அறிமுகப்படுத்துதல்
- போக்குவரத்து திட்டப்பணிகளை முன்னேற்றுவதற்கான நிதிக்கு $ 83.1 மில்லியனைப் திரட்டுதல்; மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக ரிவர்வாக் திட்டத்திற்கு M 38 மில்லியன் ஒதுக்கீடு செய்தல்
- பேருந்து போக்குவரத்து வாகனங்களுக்கான  மூன்றாவது கட்டிடவசதிக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல், முழுக்கவுமே மின்சாரமயமான போக்குவரத்து பேருந்து பராமரிப்பகம் மற்றும் பணிமனை வசதி

**ப்ராம்ப்ட்டன் நகரம் ஆரோக்கியமாதும் பாதுகாப்பானதுமான நகரமாகும்**

சமூக பாதுகாப்பை மேம்படுத்தவும், மனநல ஆதரவை மேம்படுத்தவும், செயலூக்கம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவிக்கவும் இந்த நகரம் பின்வருவனவற்றின் மூலமாக உதவியது:

- ப்ராம்ப்ட்டன் முழுவதும் சமூக பாதுகாப்பு மண்டலங்களில் வேகக் கட்டுப்பாட்டு அமலாக்கம் செய்வதற்காக 26 தானியங்கி கேமராக்களை நிறுவுதல்
- குளிர்கால மாதங்களில் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பாக செயல்படுவதை உறுதிப்படுத்த நான்கு புதிய வெளிப்புற பனிச்சறுக்கு (ஸ்கேட்டிங்) வளையங்களைத் திறத்தல்
- பொழுதுபோக்கு மையங்கள், பூங்காக்கள் மற்றும் மைதானங்கள் போன்ற உடற்பயிற்சி வசதிகளுக்கான மேம்பாடுகளை நிறைவு செய்தல்
- நகரம் முழுவதும் சுறுசுறுப்பான போக்குவரத்தை ஊக்குவிக்க 26 கி.மீ நீளத்திற்கு இருசக்கர வாகனங்களுக்கான பாதைகளை அமைத்தல்

**ப்ராம்ப்ட்டன் நன்கு நிர்வாகம் செய்யப்பட்டு வரும் நகரமாகும்**

பெருந்தொற்று பரவல் காலத்திலும் ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து சேவை சிறப்பிற்கு முன்னுரிமை அளித்ததுடன், நன்கு நிர்வகிக்கப்பட்டு வரும் நகரமாகவும் தொடர்ந்து இருந்து வருகிறது:

- குடியிருப்பாளர்களுக்கு முக்கிய சேவைகளை வழங்கும் அதே வேளையில், தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் நிதிக் கையிருப்புக்கு முன்னெப்போதுமில்லா பங்களிப்பு கொண்டபடி வரிவிதிப்புக்களை முடக்குதல்
- மூன்று AAA என்னும் மதிப்புச் சான்றினை பேணிப் பராமரித்தல்; சிறந்த நிதி நடைமுறைகளுக்கு நகராட்சி பெறக்கூடிய மிக உயர்ந்த மதிப்பீடு இதுவேயாகும்
- Mobi Inspect எனப்படும் ஆய்வு செய்வதற்கான செயலியை துவக்கத்திலேயே ஏற்றுக்கொள்ளுதல்
- $34.9M (கட்டம் 1 பாதுகாப்பான மறுதுவக்கத் திட்டம்), $27.5M (கட்டம் 2 பாதுகாப்பான மறுதுவக்கத் திட்டம்) மற்றும் $ 0.6M (நகராட்சி போக்குவரத்து மேம்படுத்தப்பட்ட துப்புரவு நிதி) ஆகியவற்றின் நிதி நிவாரணத்திற்காக வாதிட்டு நிதி பெறுதல்
- கனடா நாடு முழுவதும் உள்ள 300 சிறந்த பணியமர்த்தும் நிறுவனங்களின் பட்டியலில், கனடாவின் சிறந்த பணியமர்த்துபவர்களில் ஒருவராக ஃபோர்ப்ஸ் (Forbes ) நிறுவனத்தினால் நகர நிர்வாகம் இடம் அளிக்கப்பட்டது

2019-2022 காலத்திற்கான நகர்மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்குள்ளாக இருக்கும் 2020 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள் மற்றும் நிகழ்த்திய சாதனைகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/tocp

**அறிஞர் கூற்றுக்கள்**

“2020 ஆம் ஆண்டில் நாங்கள் ஒரு குழுவாக இருந்து சாதித்த எங்கள் கவுன்சில் முன்னுரிமைகளின் சிறப்பம்சங்களையும் முடிவுகளையும் முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பெருந்தொற்று பரவல் காரணமாக, நகர நிர்வாகத்தின் உடனடி கவனம் எங்கள் சமூகத்தை ஆதரிப்பதாக இருந்தது. அதே சமயத்தில், தற்போதுள்ள 51 முன்முயற்சிகள் மற்றும் 22 முன்னுரிமை கொண்ட விஷயங்கள் மற்றும் நகர் மன்றம் ஒப்புதல் அளித்த 20 கூடுதல் முயற்சிகள் குறித்த எங்கள் முக்கியமான பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்து வந்தோம். நாங்கள் 2021 ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கும்போது, 2021-2022 ஆம் ஆண்டிற்கான 16 முன்னுரிமைகள் குறித்து எங்கள் கவுன்சிலின் கூர்ந்த கவனம் செலுத்தல் என்பது, சமூகத்திற்கு முக்கியமான விஷயங்களில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம் என்பதை உறுதி செய்கிறது

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“2020 ஆம் ஆண்டில், கோவிட்-19 காரணமாக நாங்கள் மிகவும் சவாலான நேரங்களை எதிர்கொண்டோம், மற்றும் நகர ஊழியர்கள் நமது குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகக் குழுக்களை ஆதரிக்க அயராது உழைத்தனர். நகர் மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களை தொடர்ந்து அடைந்த வண்ணம், உலகளாவிய பெருந்தொற்று பரவலுக்கு மத்தியில் எங்கள் குழு தொடர்ந்து திறமையான மற்றும் பயனுள்ள நகர சேவைகளை வழங்கி வருகிறது. எங்கள் அணியின் 2020 ஆண்டிற்கான சாதனைகளையும், 16 முக்கிய முன்னுரிமைகளையும் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்; இவையே நமது சமூகத்திற்கு மிகச் சிறந்ததை நாங்கள் வழங்குவதற்காக எங்கள் அணி கொண்ட உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

BRAMPTON

**Media Release**

905-874-3426 | Monika.Duggal@brampton.ca